356

Regd. No. M. 878.

தொகுதி 10. பகுதி 9.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1920ஹு ஜனவரிμீ—சித்தார்த்திஹு தைμீ

விஷயங்கள்.

தற்காலநிலைமை—ஆர். அரங்கசாமி ஐயர் பி. ஏ.	249
மனதும் அதன்தாமங்களும்—கிருஷ்ணசா	257
பிள்ளையார்சுழி—வரகவிக. பாக்ஷா சாஹிபு	266
சிறுவர்பக்கம்—தேகமும் மனமும் எஸ். ஆர். அனந்த நாராயண ஐயர்	273

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷச்சந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4.
மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கபெற்றது

Copy-right Reseved.

சற்குரு பாதங்களில்—உயர்ந்த நூல்—இரண்டாம் பதிப்பு அணா	0—4—0
சகோதரபாவம்—பி. எஸ் ராமசுப்பையர் இதுவரை வெளிவராதது—அழகிய உபந்யாசம்—எளிய நடையில் உயர்ந்த உண்மைகளை அடக்கியுள்ளது	0—1—0
தியானக்கிரம விஷயம்—கே. எஸ். இராமசந்திரையர்	0—4—0
பூர்ணசந்திரோதயம் 4-வது தொகுதி. ...ந்தியாக பைண்டுபண்ணினது.	2—8—0
...வேறு.	

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

மதுரை காமாட்சியம்மன் அழகிய புட்டாச் சேலை.

விலை ரூபா 4! விலை ரூபா 4!

16 முழம் நீளம், 2½ முழம் அகலம், சாயத்திற்கு உத்திரவாதம், தற்காலத்துக்குத் தகுந்த நாணயமான நல்ல சேலை. இதில் பலவித புட்டாக்கள் போட்ட பல கலர்களில் உண்டு ஒரே முறையில் நாலு சேலை வாங்குபவர்களுக்கு வி.பி.சார்ஜ் இனாம். சாம்பிள் அனுப்பமுடியாது

சரஸ்வதிபாய் அண்டு கோ,

10, வைத்தியநாத முதலித்தெரு, சவுகார்பேட் மதராஸ்.

படங்கள்.	விலைசரசம்.	படங்கள்.
பிளாவட்ஸ்கி அம்மையார்		0—1—0
அன்னி பெஸண்டு		0—1—0
கர்னல் ஆல்காட்		0—1—0
தாமோதர மாவலங்கர்		0—1—0
ப. நாராயணையர்		0—1—0

தபாற்கூலியும் பாக்கிங்கூலியும் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

புதிய தினுசுகள்! சகாய விலை!!

சேலம், துயிலி, இன்னும் அநேகவித பல கரைகளில் 5- அல்லது 6-முழம அங்கவஸ்திரங்கள். விலை ரூபா. 10, 12, 15, 20 வரையில்

நிறம் வெள்ளை, லயிட்ரோஸ், பூநீலம், இன்னும் அநேகவித லயிட் கரைகளிலும் அகப்படும். ஒரு முறை எங்களுக்கு ஆர்டர் செய்தால் உண்மை தெரியவரும்.

கிரய ஜாப்தா இனாம்.

சர்மா அண்டு கோ., ஸ்ரீ காசி.

SARMA & COMPANY,

SILK MERCHANTS & MANUFACTURERS, *Benares City.*

இந்தியாவில் மிகப்பெரிதும்
பழமையுமான வைத்யசாலை எது?

1881-ஹூ ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ஹர
ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை

கொண்ட டப்பி

1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 வருஷகாலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்திரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம்

காசம் இவைகளு

க்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்திரைகள் டப்

பிக்குவிலை ரூ 1

இதுவரை எங்க

ள் கேட்லாக்கை

பார்த்திராவிடில்

உடனே உங்கள்

விலாசத்தை எழு

துங்கள் எவ்வித

செலவில்லாம

லும் இனாமாய்

அனுப்புகிறோம்

26 APR 1920

ஸ்ரீ ராமஜெயம்.

புது ஜவுளிக்கடை நோட்டீஸ்.

மு. ரா. பெருமாளய்யர்

மேலக்கோபுரவாசல் தெரு, மதுரை.

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நிம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ா-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக் கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி, துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை சாதா, டோரியா, சுன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை தினுசுகளும் 150, 200 நிம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப்பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளி தினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாகவும் சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம் செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பக்கூடும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேண்டுமானால் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின் சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

கரு[illegible]ன்ப்பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.
2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வாராமல் தடுக்கும்.

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது
2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.
3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலைபெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1-12—0

காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினால் காலரா விலகிப்போகும்.
2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0–12—0

அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது
2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.
தபால் சார்ஜும், பாக்கிங் கூலிகளும் பிரத்தியேகம்,
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு
எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55, ஆச்சாரப்பன் தெரு,
மதராஸ்.

ஜகப் பிரசித்திபெற்ற
ஜின்டான்மாத்திரை.

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப்பெற்று நடைபெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம் விலையோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாயிலட்கள், பாலாமிருதம், மேலான டன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்திஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ண நாயுடு,
ஸ்ரீ கிருஷ்ண ராஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி மதுரை

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 10.	சித்தார்த்தி௵ தை௴ 1920௵ ஜனவரி௴	பகுதி ௰

தற்கால நிலைமை.

வருகிற ஏப்பிரல்௴ 3 முதல் 6 வரை தேதிகளில் அடையாற்றில் தென் இந்தியா பிரஹ்மஞானக் 'கன்வென்ஷன்' என்ற மகா நாடு கூடும். அக்கன்வென்ஷனது இதற்குமுன் அறுமுறை கூடியிருக்கின்றது. இனிக் கூடப்போவது ஏழா முறை. பிரஹ்மஞான சபை அங்கத்தினர்களும், அபிமானிகளும் இக்கன்வென்ஷனுக்கு வந்திருந்து அதை நன்கு நடைபெறுமாறு உதவி செய்வாராக. 1920௵ மார்ச்சு௴ 15தேதிக்குள் தாங்கள் வரப்போவதாக முன் அறிவிக்குமவர்களுக்கு வேண்டிய வஸதிகளும் சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படும். கன்வென்ஷன் செலவுகளுக்காக அங்கு வரும் ஒவ்வொரு 'டெலிகேட்டும்' நபர் ஒன்றுக்கு $\frac{1}{2}$ ரூ வீதம் பதிவுக்கட்டணம் செலுத்தவேண்டும். மேற்கூறியபடி சரியான காலத்தில் தங்கள் பேரை பதிவு செய்பவருக்கு வேறு செலவன்னியில் இருக்கும் இடம் கொடுக்கப்படும். ஆனால் பிரத்தியேகமான இடம் தேவையானால் அடையாற்றில், பிரஹ்மஞான சபை போஜன

சாலை சூபரிண்டெண்டெண்டு, ஜே. ஸ்ரீனிவாஸராவ் அவர்களுக்கு எழுதினல் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். அப்படி எழுதும்போது மேற்கூறிய பதிவுக் கட்டணமாகிய நபர் 1-க்கு அரை ரூபாயுடன் ஒரு அரைக்கு வாடகை ரூ 4 விதம் கூடிய தொகையையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

***

இந்தியருக்கு வேளைக்கு 7 அணு விதம் போஜனம் அளிக்கப்படும். மற்ற ஆகாராதிகளுக்கு விகிதம் பிரத்தியேகம். வேறு விபரங்கள் தேவையுள்ளோர் கன்வென்ஷன் உதவிக் காரியதரிசி ஆர். முதலியாண்டான் செட்டியார் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். உபன்யாஸம் முதலியவைகளுக்கு அட்டவணை பின்னர் தெரிவிக்கப்படும்.

டி. ராமசந்திரராவ்,
தென் இந்தியக் கன்வென்ஷன்,
காரியதரிசி.

***

பிரஹ்மஞான சபை அங்கத்தினரும் அபிமானிகளும் இக்கன்வென்ஷனுக்குச் செல்லவேண்டியது மிகவும் அவசியமாகும்.

***

உலக யுத்தமானது முடிந்துவிட்டதாகையால் உலகத்திலுள்ள பற்பல தேசங்களிலும் பிரஹ்மஞானக் கிளர்ச்சியானது உற்சாகரமான வேகத்தோடு வெளிக்கிளம்புகின்றது. ஒவ்வொரு தேசமும் ஈசுவரனுடைய பிரத்தியேகமான ஆவிர்பாவம் என்னலாம். ஈசனுடைய திருவிளையாட்டானது ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறாகக் காணப்படுகின்றது. உலகம் முழுவதும் ஒரு மாதிரியாகவே காணப்

படவேண்டுமென்பது ஈசுவரனுடைய திருவுள்ளம் இல்லையெனத் தோன்றுகின்றது.

***

ஆகையால் ஒவ்வொரு தேசத்திலும் ஈசுவரனது ஆணையால் எந்த அற்புதமான அழகுகளும், குணங்களும் வெளியாகவேண்டும் என்று ஏற்பட்டிருக்கின்றதோ, அவை வெளிப்படவேண்டுமானால், அவ்வத்தேசங்கள் துண்டுதுண்டாக வியக்தமான அங்கங்களாய் அமையவேண்டும். ஆகையால் பிரஹ்மஞான சபையில் ஒவ்வொரு தேசத்திற்கும் வியக்தயான பிரிவு ஏற்படும்போது சந்தோஷத்திற்கு இடமாகின்றது. சென்ற வருஷத்தில் அயர்லாந்து, கனடா, கியூபா, மெக்ஸிகோ, ஆர்ஜெண்டயின், சிலி, எகிப்து தேசங்களில் அந்தந்த தேசப்பிரிவு சபைகள் ஏற்பட்டிருக்கின்றன.

***

இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் 'சத்கர்ம' என்ற பெரிய பிரஹ்மஞானக் கிளைச்சபை ஏற்பட்டிருக்கின்றதாம். முக்கியமாய் வயதிற் சிறியவர்கள்தான் அதில் அங்கத்தினராம். லோக ஸேவைக்காக ஒவ்வொருவரும் ஒரு கைங்கரியம் செய்யவேண்டுவது என்பது முக்கிய கொள்கையாம். பிரஹ்மஞான சபையின் சாஸ்திர ஆராய்ச்சிகளை படிப்பவர் எங்கும் காணப்படுகின்றனர். இம்மாதிரி சத்கர்மங்களைச் செய்யும் சபைகளும் அத்யாவசியம் என்பது சற்று நிதானித்தால் நன்கு விளங்கும். எப்போது ராஜஸ குணம் மேலிட்ட இங்கிலாந்திலேயே இத்தகைய சத்கர்ம சபையானது சிலாக்கியம் எனக்கூறினால், விசேஷமாக ஒய்விலேயே காலத்தைக் கழிக்கும் இந்தியாவில் இவ்வித ஸத்கர்மக் கிளைச்சபைகள் ஏற்பட்டால் மிகவும் உபயோகம் உண்டு என்று நாம திட்டமாகச்சொல்வோம்.

***

காசியில் கூடிய சென்ற வருஷத்திய இந்தியன் செக்ஷன் கன்வென்ஷனில் காரியதரிசி ஸ்ரீமான் ராய்பூர்ணேந்து நாராயண சிம்ஹா அவர்கள் படித்த அறிக்கைப் பத்திரமானது மிகவும் கவனிக்கத்தக்கது. மாகாணங்கள்தோறும் செய்திருக்கும் வேலையைப் பல்பல விபாகங்களாய்ப் பிரித்து ஒன்றையொன்றுடன் ஒத்துப்பார்த்து எழுதியிருப்பதிலிருந்து எந்தெந்த விபாகத்தில், ஒரு மாகாணமானது சிறந்திருந்தது, மற்றைய எந்த விபாகங்களில் குறைந்திருந்தது என்றறியவும், அதனால் குறைவுபட்ட விஷயங்களில் முன்னுக்கு வரவேண்டுமென்ற ஊக்கத்தை யுண்டுபண்ணவும கூடியதாயிருந்தது.

***

தென் இந்தியாவானது நமக்கு மிகவும் உரித்தாயிருப்பதாலும், அதைச் சேர்ந்த நாம் தென் இந்தியாவின் பெருமையிலும் சிறுமையிலும் பாத்தியப்பட்டவர்களாகையாலும், நம்மிடம் சிலாக்கியமாக இருக்கும் பாகங்களை இனி சிலாக்கியதரமாகச் செய்து, குறைவுகளை நிறைவு செய்துகொள்ளவேண்டியது நமது கடமையாகையாலும், நம்முடைய குறைவு நிறைவுகளைக் கவனிப்போம். இந்தியன் செக்ஷனுக்குச் செலுத்தவேண்டிய வருஷக்கட்டணம் 1917—18ல், ரூ.5843—4—0 தென் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டது 1918—19ல், ரூ.5571—14—0 தான் அனுப்பு. இவ்விஷயத்தில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. கிளைச்சபைகள் புதிதாய் ஏற்படுத்துவதிலும், தூக்கத்திலாழ்ந்திருந்த கிளைச்சபைகளை ஊக்கப்படுத்துவதிலும் விஹாரமாகாணத்தில் நம்மைவிட ஊக்கமதிகம். அவ்வாறே தென் இந்தியாவில் காட்டிலும புதிய அங்கத்தினர் அநேகர் விஹார் மகாணத்தில் சேர்ந்திருக்கின்றனர். ஆகையால் தென்இந்தியாவானது இப்போதைக்காட்டிலும் அதிகமான ஊக்கத்தைக் காட்டாவிடில் மற்ற மகாணங்களைவிட மிகுந்த தாழ்ந்த நிலைமைக்கு வந்து விடும். அங்ஙனம் நேரிடாவண்ணம் செய்வது நம்மவர் கடமையாம்.

நமது பூர்ணசந்திரோதயம், முதலிய மற்ற திராவிட பாஷைப் பத்திரிகைகளைப்பற்றி மேற்கூறிய அறிக்கைப் பத்திரிகையில் விரிவாயும், சிலாக்கித்தும் கூறியிருக்கலாம். ஆனால் நம்முடைய பாஷையை வடபாகத்தில் அறியாமையாலும், நம்முடைய விருத்தாந்தத்தைப்பற்றி கேட்காமையாலும் ஒன்றும் சொல்ல அவர்களுக்கு முடியவில்லை போலும். மற்ற திராவிடப்பத்திரிகைகளைப்பற்றி நமக்கு விபரங்கள் தெரியாது என்றாலும் நமது பத்திரிகையைப் படிக்கும் பிரஹ்மஞான சபை அங்கத்தினரின் சங்கியை தினேதினே அதிகரித்து வருகின்றது. காசியிலிருந்து அனுப்பப்படும் உதவித் தொகையோ காகிதக்கிரயத்தையும், மற்ற செலவுகளையும் உத்தேசித்து, முற்றிலும் போதாது என்பது சந்தேகமில்லை. அடுத்த வருஷத்துக்குள் இந்தியன் செக்ஷன் காரியதரிசி இப்பத்திரிகையும் இதைப்போலவே மற்ற பத்திரிகைகளும் செய்துவரும் உபகாரத்தையும் பற்றி விபரங்களைத் தெரிந்து கொண்டு அறிக்கையிலும் சிலாகித்துக் கூறுவார் என்றும் எண்ணுகிறோம்.

***

கொச்சி சமஸ்தானத்தில் இதுகாறும் பொது ரஸ்தாக்களில் சிலவற்றில் தள்ளுண்ட ஜாதியார் நடக்கக்கூடாதென்றும், பொதுப் பள்ளிக் கூடங்களில் அச்சாதி மாணவர் புகுதல் கூடாதென்றும் ஒரு தீய வழக்கம் இருந்தது. சிலநாட்களுக்கு முன்னர் பிறந்த உத்திரவினால் எல்லாப் பொது ரஸ்தாக்களிலும், பொதுப் பள்ளிக்கூடங்களிலும் மேற்கூறிய ஜாதியாரும் மற்றவர்களைப்போல நடமாடவும், நடக்கவும், படிக்கவும், உரிமையுண்டு என்று ஏற்பட்டு விட்டது. இது மிகவும் சந்தோஷகரமான சமாசாரம். இது காலத்தின் அறிகுறியாகும்.

***

"பாலரக்ஷக சங்கம்" என்று சென்னையில் ஒன்று சென்ற 12 வருஷங்களாக நடைபெற்று வருகின்றது அச்

சங்கத்தின் 12வது வருஷோற்சவமானது நடைபெற்ற சமயம் சென்னை மாகாண கவர்னர் வில்லிங்டன் பிரபு அக்கிராஸனத்தை அலங்கரித்தனர். அனாதைக்குழந்தைகளுக்கு உண்டி உடை கொடுத்துக்காப்பாற்றுவதையும், அவர்களுக்குக் கைத்தொழில், கல்வி யிவைகளைக் கற்பித்தும், பெண்பால்களை கல்யாணம் செய்விப்பதும் குழந்தைகளை எவ்வண்ணம் வளர்க்கவேண்டியது என்றவிஷயமாய்ச்சரியான அறிவைப்பரவச் செய்வதும், இச்சங்கத்தின் நோக்கமாகும். 88 ஹிந்துக் குழந்தைகள பாதுகாக்கப் படுகின்றனராம். தனிகர்களுடைய ஆதரவானது மிகவும் குறைச்சலாயிருப்பதால் இச்சங்கத்தாரால் எவ்வளவு நன்மை செய்ய முடியலாமோ அவ்வளவையும் செய்யமுடியவில்லையென்று அறிக்கைப்பத்திரத்தில் கூறப்பட்டது. வில்லிங்டன் பிரபுவானவர் கூறிய முடிவுரையில் தனிகர்களாயிருப்பவர்கள் தங்கள் பொறுப்பை நன்றாய் உணர்ந்து, தம்மிலும் மெலிவாருக்கு உதவுதற்காகவே கடவுள் தங்களுக்குப் பணம் கொடுத்திருக்கிறார் என்று தீர்மானம் செய்யவேண்டும் என்றும், பம்பாய் மாகாணத்தில இவ்விஷயமாய் முயலும் சங்கங்களுக்குப் பண உதவி தாராளமாய்க் கிடைத்தது எனவும், அம்மாதிரியே சென்னையிலும், தனிகர்கள் பொருளுதவி செய்யவேண்டும் என்றும் கூறினர். லார்டு வில்லிங்டன் கூறிய உயர்ந்த புத்திமதியை யாவரும் ஏற்றுக்கொள்வார்களாக. பாலரக்ஷகச் சங்கத்தில் போஷிக்கப்படும் குழந்தைகளுக்கு அவர் அவர்கள் பிறந்த மதத்தின் போதனையைத் தகுந்த உபாத்தியார் மூலம் போதிக்க ஏற்பாடு செய்ய முயல்வாராக. அப்படிச் செய்தால் ஹிந்துக்களுடைய அனுதாபம் அதிகமாகலாம்.

***

இந்தியச் சாரணர் சங்கத்தின்ரக்ஷகர் மாதுஸ்ரீ அன்னி பெஸண்டம்மையவர்கள் என்பதும், இந்தியாவில முதன் முதலாக இந்தியர்கள் சேருவதற்கு இயலும்படி ஸ்தாபிக்கப்பட்ட சாரணர் சங்கம் இதுவே என்பதும் நேயர்கள்

அறிவார்கள். லார்டு பெண்ட்லாண்டு சென்னையில் கவர்னராக இருந்தபோது அவர் இச்சங்கத்தை வெறுத்ததும், அதை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்று முயன்றதும் அது பயன்படாமல் போனதும், இச்சங்கமானது மிகவும் பலமாகக் கிளம்பி அபிவிருத்தியடைந்ததும், அப்பால் இதற்குப்போட்டியாகச் சென்னையில் வேறு ஒரு சாரணர் சங்கம் சர்க்கார் ஆதரவின்கீழ் ஆரம்பிக்கப்பட்டதும், நேயர்கள் அறிவார்கள். லார்டு பெண்ட்லாண்டுக்குப்பிறகு நமது பாக்கிய வசத்தால் கவர்னராய் வந்திருக்கிற லார்டு வில்லிங்டன் அவர்கள் முன் கவர்னர் மாதிரியிருக்காமல், இந்திய விஷயங்களை அனுதாபத்துடன் பார்த்து வருகின்றனர். அவர் இந்திய சாரணர் சங்கத்தாரின் காட்சியைப் பார்வையிட்டு அனுதாபத்துடன் பேசிப்பேசினர். மறுதரம் புதிய சாரணர் சங்கத்தின் காட்சி ஒன்று நடைபெற்றபொழுது இந்தியச்சாரணர் சங்கத்தாரையும் அவர்கள் ரக்ஷகரையும் வருவித்து இவர்களையும் அபிமானித்தார். அவர் கூறிய முடிவுரையில், இரண்டு சங்கங்களும் கூடிய சீக்கிரத்தில் ஒன்று சேரவேண்டுமென்ற எண்ணத்தையும் வெளியிட்டார். அம்மாதிரியே மாது ஸ்ரீ பெஸண்டம்மையும் இரண்டொரு சமயங்களில் தமது அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கிறார். அவ்வண்ணம் ஒற்றுமையேற்படவேண்டிய தவசியம். ஆனால் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டு (1) சாரணர் சங்கமானது சர்க்கார் ஆதரவின் கீழ் நடைபெறுதல் கூடாது. ஒரு தேசத்திலும் அப்படி சர்க்கார் ஆதரவிலாவது ஆளுகையிலாவது சாரணர் சபை இல்லை. சர்க்காருடைய விரோதம் வேண்டுமென்று இல்லை. ஆனால் சர்க்காருடன் சம்பந்தம் இருந்தால் சாரணர்களுடைய முக்கிய தன்மையாகிய சுதந்திரம், உற்சாக சக்தி முதலிய குறைவுபடும் (2) மாதிரு தேசபக்தி ஒருக்காலும் குறைவுபடக்கூடாது, சர்க்கார் அதிகாரிகளும் அன்னிய தேசத்தவர்களும் விசேஷமான செல்வாக்குள்ளவர்களாயிருந்தால் வாலிபர்கள் தங்களுடைய மாதிரு தேசபக்தியை ஒளிக்காமல் வெளிப்படையாக ஜயவாழ்த்துகளிலும், பாடல்களிலும் கூற உற்சாகப்படுத்தப்படமாட்டார்கள். இவ்விரண்டு விஷயங்களிலும் ஒருகுறைவும் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டால் இரண்டு சங்கங்களும் ஒன்றுசேர்வது யாவருக்கும் பொருத்தமான விஷயமாகும். இல்லையேல் இரண்டும் ஒன்று சேருவதில் லாபம் இல்லை. ஆனால் இந்தியாவை உண்மையாய் அபிமானிக்கும் குணத்தையுடைய நமது மாது ஸ்ரீ பெஸண்டம்மையும் வில்லிங்டன்

பிரபுவும் ஒன்று சேர்ந்திருப்பதால் அவர்கள் சேர்ந்து செய்யும் காரியம் நியாயமாகவேயிருக்கும் என்று நாம் திண்ணமாய் நம்பலாம்.

***

லண்டன்மாநகரத்தில் உலகத்திலுள்ள சாரணர்கள் எல்லாருக்கும் பொதுவாக ஒரு பொருக்காட்சியானது வருகிற ஜூலை மீ 30-ம் தேதி முதல் ஆகஸ்டு 7-ம் தேதி வரை நடக்கப்போகிறதாம். அதற்கு இந்தியச் சாரண சங்கத்திலிருந்தும் சில பிரதிநிதிகளும் அச்சங்கத்தின் தலைமை கமிஷனரும் போகப்போகிறார்களாம். இந்தியாவானது எங்ஙனம் மற்ற சுயாட்சி தேசங்களைப்போல் சமமான உரிமை பெற்று லீக் ஆவ் நேஷன்ஸ் என்ற நேசஜாதியார் சபையில் விளங்குகின்றதோ, அம்மாதிரியே வாலிபர்கள் சபையாம் இச்சாரணர் சபையிலும் இந்தியப் பிரதிநிதிகள் சென்று இந்தியச் சாரணரும் தங்கள் வேலைப்பாட்டை காட்டக்கூடிய கைத்தொழிற் சாமான்களையும் அனுப்புவார்கள் எப்படி இந்தியர், சண்டையில் ஐரோப்பியருடன் சமமாய் நின்று போர் செய்ததினிமித்தம், இந்தியருடைய வீரத்தையும், பெருந்தன்மையையும் அருமையையும் ஆங்கிலேயரும், மற்றவரும் அறிந்தனரோ அம்மாதிரியே, இவ்வாலிபரும் உலகத்தில் பற்பல பாகங்களினின்று வரும் சாரணச்சிறுவர்களுடன் கூடிப்பழகி, அளவளாவி வருவதினால், இந்தியரைப்பற்றிய தூர் எண்ணங்கள் எல்லாம் மற்றவர் மனதிலிருந்து நீங்கி, இந்தியாவையே உலக வாலிபர்களின் மனதில் கௌரவமான நிலையை அடையும்படி செய்யும் என்பதும் நாம் திண்ணமாய்கொண்ட நம்பிக்கை. இந்தியச் சிறுவர் ஸ்ரீமான பியர்ஸுடன் இங்கிலாந்து செல்வதும் அவர்கள் பாக்கியம். இங்கிலாந்திலுள்ள பிரஹ்மஞான சபை அங்கத்தினர் எல்லோரும் இச்சிறுவர்களுக்குவேண்டிய உதவியைச் செய்து நல்வரவு ஏற்பார்கள் என்று நம்புகிறோம். ஏன் என்றால் பிரஹ்மஞான சபை யங்கத்தினர் சகோதர பாவத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் சாரணர்களோ அச்சகோதர பாவத்தை நம்பி நடத்தையில் விளக்கப்பழகுபவர்கள். இருவருக்கும் இத்தன்மையைவிட ஒற்றுமைக்கு வேறு என்ன காரணம் வேண்டும்?

ஆர். ரெங்கசாமி ஐயர்

பணமும் அதன் தர்மங்களும்

(245-ம் பக்கத் தொடர்ச்சி)

---

13. பிராணப்பிரயாண சமயத்தில், அதாவது மரண காலத்தில் ஜீவனுக்கு ஒரு நிமிஷ நேரம் திவ்விய திருஷ்டி யுண்டாகி, சூக்ஷ்மாகாயத்தில் இவனது நல்ல அல்லது கெட்ட எண்ணங்களான எல்லா ரூபங்களையும் பூர்த்தியாய் ஓர் கணபொழுதில், பார்ப்பானென்று, மோஹாந்த நிலைமை யடைந்துள்ள, ஞான சக்ஷுக்களான ராஜயோகிகள் சொல்லுகிறார்கள். இவ்விதம் அந்திய காலத்தில் காணப் படு முருவங்களி லெவ்வுருவம் விசேஷமாயிருக்குமோ, அவ்வுருவத்தில் மனது நின்று, அதே யுருவத்தை யெண்ணிக் கொண்டு, ஜீவன் ஸ்தூல சரீரத்தை விட்டு நீங்கும். வாழ்நாளில் விசேஷகாலம் ஸதிரீலோலனா யிருப்பானே யாகில், அத்தகைய புருஷனுக்கு மேற்கூறிய ரீதியாய் வேசியா ஸ்திரீகளின் உருவங்கள் விசேஷமாகக் காணப்பட்டு, அவைகளையே ஸ்மரித்துக் கொண்டு உயிர் நீங்குவான். தன் ஜீவ காலமுழுவதும் பக்தி பூர்வகமாய் ஈசுவரனிடத்தில் மனதைச் செலுத்தி, அவரைத் துதித்து வந்த ஜீவன், மரணகாலத்தில் மேலான ஈசுவர ரூபங்களைப் பார்த்தும் துதித்தும், உடலை விட்டு நீங்கும். ஆகவே, இங்கு எந்த வஸ்துவில் மிக அதிகமாய் மனது சென்று கொண்டிருக்குமோ, அதன் உருவமே கடைத்தலத்திலும் ஞாபகத்திற்கு வரும்; கண்களுக்கும் காணப்படும். வேறு விதமாயிருப்பது சாத்தியமாகாது. இதனையே நமது சாஸ்திரங்களும் போதிக்கின்றன.

14. ஜீவன் உயிர் நீங்குங்காலத்திலெந்த ரூபத்தை ஸ்மரித்துக் கொண்டிருக்குமோ அந்த ரூபத்தையே பின்னர் அடையுமென்பதாய் மேலோர்கள் கூறியுள்ளார். சச்சிதானந்த பரப்பிரஹ்ம ஸ்வரூபியாகிய கீதாசாரியரின் கருத்து மிங்கு கவனிக்கத்தகும்.

யம் யம் வாபிஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலேவரம்।
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ பாவித:॥

இதன் தாத்பரியம் "ஏ அர்ஜுனா! புருடன் எக் காலத்திலும் ஒரு வஸ்துவை நினைத்து, அந்தன்மையான உருவமே மனதின்கண் வியாபித்து மரணகாலத்தில் எப் பொருளை ஸ்மரித்து தேகத்தை விடுகிறானோ, அவன் மீண்டு அதே உருவத்தை அடைகிறான்."

ஆகவே, நல்ல உருவத்தையடைய வேண்டுமானால் ஜீவித காலமுழுவதும் பூததயையோடுங்கூடிய பக்தியுள்ள வனாயிருக்கவேண்டும். ஸதா உத்கிருஷ்டமான நல்ல எண்ணங்களையே மனதில் ஸ்மரித்து வரவேண்டும். இதை விட்டு, உள்ள நாள் முழுவதும் இஷ்டப்படி நடந்து உயிர் விடும் போது மாத்திரம் "ஸ்ரீராம" என்று ஒரு தரம் சொல்லி விட்டால் எல்லாத் தீய கர்மங்களும் நசித்து விடும் என்பதாயும், அதற்குப் பிரமாணமாய் அஜாமிளன் முதலியவர்களின் கதைகள் உண்டென்றும், வீண்வார்த்தை கூறித் திரியும் பேயர்களின அபிப்பிராயம் எவ்வளவும் சரியன்று. இவ்விதம குப்தமாய்ப் புதைந்துள்ள உண்மையான அர்த்தத்தைக் கிரஹிக்கமாட்டாமல் "நுனிப்புல்லை மேயும் ஆட்டைப் போல்" உயர்ந்த கிரந்தங்களை மேலடியாய்ப் பார்த்து, விபரீதார்த்தம் செய்பவர்களின் கதி மிகவும் பரிதாபத்திற்கிடமானது. அதிகமேன்? ஒருவன் தன் இளமையிற் கல்வி கற்காது ஆடித்திரிந்து "யுக்த வயதில் சமயம் வந்த போது எழுதவும் படிக்கவும் ஆரம்பித்தால், அவனால் இயலுமா? எந்தக்காரியந்தான் பழக்கமில்லாமல் செய்யமுடியும்? விவசாயத்திற்குதவும் எருதுகளுமன்றோ பழகும் வரையில் ஏரிற் பூட்ட உபயோகமில்லாது பழக்கப்பெற்ற பின்னரே வேலைக்கு உதவுகின்றன. யாதொரு தொழிலையும் அப்பியாசமின்றி, நினைத்த வளவிற் செய்வது இயலாத காரியம. "சாதனமின்றி யொன்றைச் சாதிப்பாருலகிலில்லை." (கைவல்யம்.)

15. ஆகையினாலே, நாம் ஒவ்வொருவரும் பிரதிதினமும் இடைவிடாமல் ஈசுவரார்ப்பணமாக, எல்லாக்கர்மங்களையும் செய்து ஸதா நல்ல சங்கர்ப்பங்களையே பழகிவர முயலவேண்டும். அவ்வாறு செய்தால் தான் அந்திய காலத்தில், நினைத்த வண்ணம் நல்ல சங்கற்ப முண்டாகி, நல்லுருவங்கள் காணப்படும். இதுவே ராஜயோகம். இக்கருத்துக் கொண்டே பக்தருட் சிறந்த பட்டினத்தடிகளும்

"காலன் வருமுன்னே கண்பஞ்சடையு முன்னே,
பாலுங் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு." என்று கூறியுள்ளார்.

16. இவ்விதம் ராஜயோகத்தை யப்பியசிப்பவர் உத்தமஸ்திதியையடைந்து பிரஹ்ம ஞானத்தை அடைவதற்கு சக்தியுள்ளவர்களாவார். இது விஷயமாய் பகவான் ஸ்ரீ கோபால மூர்த்தி என்ன உபதேசித்துள்ளார். என்பதை இங்கு கவனிப்போம்.

ஸ்ரீபட்டனாருளிச்செய்த தமிழ்கீதை 8-வது அத்தியாயம்.

(1) இந்தவுடலம் விடும்பொழுதிபா வனியாதொன்றினை நினைந்தா, னந்தவளவே யந்தப்பாவனை யாலதனை யடையுமா, லென்றனியல்பே யெப்பொழுது மிதயத்திடை கொண்டெனபாலாஞ், சிந்தையொடும் வாளாமற்றொடங்கி லதனை லெனையேசேருதியால். செய்யுள் 6.

(2) மருவற்குரிய வன்புடையார் மயங்காயோக மனத்தாலே, புருவத்திடையே தம்முடைய புரைதீருயிரைப் புகநிறுத்தி, யுருவத்தினைவிட் டிடிலிந்த யோகத்தாலே யவனோடும், பொருவப் பொருவாப் பொருண் மேலின்னம் புகல்வன பெருவேலோய். செய்யுள் .9

17. எவன் பலனை விரும்பாமல் கர்மத்தைச் செய்கின்றானோ அவனே பரமபக்தன். அவன் கர்மராசியின் பலனையடைய மாட்டான். பிழைக்கடையைச் சுத்தஞ் செய்பவன் கூட தன் தொழிலால் ஜனங்களுக்குச் சௌக்கியமுண்டாவதால், தான் செய்யுந் தொழில் ஈசுவர பூஜையென்றும், பரோபகாரத்தின் பொருட்டு உலக நாயகன் தன்னை இவ்வேலைக்கு நியமித்தாரென்றும் நினைத்து, உண்மையான எண்ணத்தோடு தன் தொழிலை நடத்த வேண்டும். ஆகையினால், பக்தர்கள் எப்பொழுதும் எவ்வித வேலைசெய்து கொண்டிருந்தாலும், ஈசுவரனையே தியானம் செய்து கொண்டிருக்க வேண்டும். இது சாத்தியமாமென்பது' உத்தம யோகியாகிய பட்டினத்துஸ்வாமிகள் உபதேசித்துள்ள "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்ற பாட்டினாலும் கைவல்யத்தில் கூறப்பட்டுள்ள, "விவகார வேலையெல்லாம் சமாதியென்றால் விகற்பமன்றோ, அவதானம் நழுவிடாதோ? அதற்கொரு திருஷ்டாந்திரம் கேள், நவமாகப் பரபுருடன் தன்னை நயந்தனுபவித்த நாரி நெஞ்சம், தவமாக மனைத் தொழில்கள் புரியும்போதும், தழுவியனுபவித்த சுகந் தனை விடாதே," என்ற பாட்டினாலும் விசதமாகும். ஆதலால் பக்தர்கள் மேற்கூறியவாறு அனுஷ்டிக்கச் சதா திடப் பிரயத்தினம் செய்து கொண்டிருக்கவேண்டும். இதுவே உண்மையான பக்த லக்ஷணமாம். இதுவே ஞானம். ஈசுவர தத்துவம். இவ்விதம் செய்வதால் வேலைசெய்து கொண்டிருக்கும்போது கூட மனம் ஈசுவரனிடத்திற் சென்று கொண்டிருக்கும். அதனால் சூக்ஷ்ம காயத்தில் ஈசுவர ஸ்வரூபங்கள் அதிகமாகி, அந்திய காலத்தில் ஈசுவரத்தியானமே உண்டாகும். இந்த கர்மயோகத்தைக் கிரந்தராத்தினமாகிய கீதா சாஸ்திரத்தில் விரிவாயுபதேசித்துள்ளார்.

18. ஒருவன் மனதில தீயசங்கற்பம் உண்டாகுமானால் அதை ஆதாரமாகக் கொண்டு ஒரு சங்கற்பப் பிசாசம் (Thought form) ஜனிக்கும். இந்தசங்கற்பப் பிசாசம்

திவ்விய திருஷ்டியுள்ள மஹா புருஷர்களுக்கு மாத்திரம் காணப்படுமென்பதாய் முன்னமே (12-வது பாராவில்) கூறப்பட்டிருக்கிறது. இந்த சங்கற்ப தேவதை பார்வைக்குப் புலப்படாமல் பக்கத்திலிருப்பவன் மனதில் பிரவேசித்து, அவன் மனதைச் சலிக்கச் செய்து, தீயஎண்ணத்தை உண்டு பண்ணும். யாதாமொருவன் திருடவேண்டுமென்ற சங்கற்பத்தை மனதில் கொள்வானேல், இந்த சங்கற்பத்தால் அவனுடைய சூக்ஷ்மசரீரத்தில் ஒரு துஷ்ட சலனம் ஏற்பட்டு, இச்சலனம் அச்சரீரத்தையனுசரித்துள்ள புவர்லோகத்தில் வியாபித்து அதன் வழியாய் எல்லா ஜீவராசிகளின் சூக்ஷ்ம சரீரங்களையுந் தாக்கி, இதரர்களுக்குந் திருட்டுப் புத்தியையும் உண்டுபண்ணும். இந்த தோஷம் இவனைச் சேரும். இவ்வித தீயசலனத்தையும் அதனால் ஏற்படும் தோஷத்தையும் (நிஷ்டையினால்) நிவர்த்தி செய்யமுடியாத வரையில் யாவருக்கும் திருட்டு எண்ணம் அதிகமாக விருத்தியாகும். இவ்விதமே இதர தீயசங்கற்பங்களும் எல்லோருக்கும் வியாபிக்கும்.

19. க என்பவன் ங என்பவனிடத்தில் 100 ரூபாய் கடன் வாங்கினானேயாகில், அதைக் கொடுக்கும் வரையில் பாக்கியிருக்குமல்லவா? அவ்வாறே, ஒருவன் தீயசங்கற்பத்தினால் மற்றொருவன் மனதைக் கெடுப்பதால் முதல் மனிதன் இரண்டாவது மனிதனுக்குக் கடனாளியாவான். இவன் தீய எண்ணங்களையும், அதனால் உண்டாகும் தீய காரியங்களையும் தடுத்துப் புத்தியை மேலான நிலைமைக்குக் கொண்டுவரும் வரையில் முதல் மனிதன் பாக்கி தீருகிறதில்லை. இந்த ஜன்மத்திலாவது அடுத்த ஜன்மத்திலாவது இவனுக்கு மனத்தூய்மையுண்டாகும் வரையில் இவன் அடைந்துள்ள கடன் பாக்கியிருக்கும். இதற்கே கர்மமென்று பெயர். இவ்விதம் அநேகமாயிரம் ஜீவர்களைத் தீய சங்கற்பங்களால் கெடுத்த முதல் மனிதனுக்குக் கர்மம் அதிகமாக விருத்தியாகும். இப்படிப் பலரும் துஷ்டர்களா

யிருப்பார்களேயானால், பல்கோடி மனிதவர்க்கத்தினரும் மனது தீயதாக மாறுதலடைந்து நிலையில்லாமல் எப்பொழுதும் தீய எண்ணங்களின் ஸ்வரூபங்களையுகித்து விருத்தியடையும். இந்த தீய பிசாசங்கள் பிளேக், மஹாமாரி, முதலாகிய தொத்து வியாதிகளையனுசரித்து உலகினர் யாவருக்கும் கெடுதி விளைக்கும். ஆனால், பூததயையோடுங்கூடிய பரிசுத்தமான எண்ணங்களும் அதனால் மனத்தூய்மை பெற்ற மஹாபுருஷர்களின் உள்ளத்தில் இந்த தீய சங்கற்ப அலைக்கூட்டங்கள் பிரவேசிக்கவாவது, அவர்கள் எண்ணங்களை வேறுபடுத்தவாவது சாத்தியமாகா.

20 மின்சாரம் ஊசியையிழுக்கும் ரீதியாய்த் துஷ்டன் மற்றவரிடத்துள்ள துஷ்ட சங்கற்ப ரூபங்களையும் ஆகர்ஷித்துக் கெடுவான்.

21. கலியுகத்தில் துஷ்டர்கள் அதிகமாயிருப்பதால் மேற்கூறியவாறு தீய சங்கற்பங்கள் அதிகமாகிச் சாந்த மார்க்கத்தில் பிரவிருத்திக்க முயலுபவர்களின் மனதில் பிரவேசித்துச் சலனத்தையுண்டுபண்ணும். இவ்வித தீயசங்கற்ப சொரூப ராசியின் விருத்திக்கே "கலிமாஹாத்மியம்" என்று நமது சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பிசாசகோடிகள் பிளேக், மஹாமாரி, க்ஷாமம் சண்டை ஆகிய இவைகளுக்குக் காரணமாகும். ஆகையினால் பிரஸ்தாப பிசாசரூபங்கள் நாசமாகும் வரையில் உலகத்திற்கு க்ஷேமமுண்டாக மாட்டாது. இரும்மேடோ தீய எண்ணங்களும் தீய காரியங்களுங்கூட குறைவுபடா

22. துஷ்ட சங்கற்பங்களால் துஷ்ட சலனமும், பிசாசகோடிகளும் உண்டாமென்பதை முன்னரே அறிந்திருக்கிறோம். அவ்வாறே, நல்ல சங்கற்பங்களுக்கு சௌந்தரியமும், பிரகாசமும், அமைந்த திவ்விய தேவதாஸ்வரூபங்கள் உண்டாகும். यद्भावं तद्भवति என்ற வசனம் இங்கு கவனிக்கத் தக்கது. இந்த சங்கற்ப தேவதாஸ்வரூபங்

கள் பக்கத்திலிருப்பவரின் மனதில் பிரவேசித்து, அவர்களுக்கு நல்ல எண்ணங்களை உண்டு பண்ணி, அவர்களை, யும் அவ்வாறு தியானிக்குப்படி செய்யும். இவ்விதம் உலகமெல்லாம் நல்லெண்ணங்கள் நிறைந்து, பூததயையோடுங்கூடிய பக்தியையுண்டு பண்ணும். இதனால் தேவதாஸ்வரூபங்கள் விசேஷமாய் விருத்தியாகிக் கெட்ட சங்கற்பங்களையும், அவைகளால் உண்டாகிய பிசாசகோடிகளையும், நாசஞ்செய்யும். இக்காரணத்தால் சதபாவம், பக்தி, ஞானம், வைராக்கியம், பூததயை ஆகிய இவைகள் விருத்தியாகும். உலகம் க்ஷேம நிலைமையை அடையும். இந்த ராஜயோகத்தினால் இதே பிறவியில் நாம் செய்துள்ள ஆயிரக்கணக்கான கடனை (கர்மாக்கியைத) தொலைக்கக்கடவோம். ஆகையாற்றான், பலனை இச்சியாமல் அகங்காரமின்றி, "கிருஷ்ணார்ப்பணம்" என்பதாக எல்லா நற்காரியங்களையும் செய்ய வேண்டுமென்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்துள்ளார். நம்முடைய புண்ணியத்தை கிருஷ்ணார்ப்பணம் செய்தால் சர்வஞ்ஞன, அப்புருஷோத்தமன் பாக்கியிருப்பவர்களுக்கு அதை பாகித்துக் கொடுத்து, அவர்களுக்கும் தூயசிந்தனை யுண்டாகும்படி அருள்செய்வார். ஆகவே, நாம யாவரும் அவ்வாறு செய்து வர முயற்சியுடையவர்களாயிருக்கவேண்டும். அதாவது மனதைக் களங்கரஹிதமான மேலான எண்ணங்களையே கொடுத்துப் பழக்கிவரவேண்டும்.

23. வினு:—மனதைச் சலனமறச் செய்வதெப்படி?

விடை:—குதிரைப் பாகன் பழக்கமில்லாத அசுவத்தைக் கிரமக்கிரமமாய், சாதுவாகப் பழக்கும் விதமாய்ப் பிரதி அப்பியாசியும் சலித்துக் கொண்டிருக்கும் தன் மனதை ஸ்திமிதத்திற்குக் கொண்டு வரவேண்டும். கைவல்யத்தில் "சாதனமின்றி யொன்றைச் சாதிப்பாருலகிலில்லை" என்றபடி, நாம் தேர்ச்சியடைய விரும்பும் 'யாதாமொரு

விஷயத்தை இடைவிடாப் பழக்கத்தால் மாத்திரம் கைகூடச் செய்யலாமென்பதும், எக்காரியமும் முந்தின பழக்கமின்றித் திடுமெனச் சாதிக்கப் பெறமுடியா தென்பதுந் தெற்றெனப்புலப்படும்.

24. சாதாரணகாலத்தில் மனது எவ்விஷயங்களிற் சென்று கொண்டிருக்குமோ, அவ்விஷயங்களிலேயே தியானக்காலத்திலும் பிரவர்த்திக்க முயலும். ஆகவே, விஷயங்களிலுள்ள ஆசையை முற்றும் விட்டொழிக்க வேண்டும். இல்லையேல், மேன்மேலும் துக்கத்தை யனுபவிக்க வேண்டி வரும். "அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம் அஃதுண்டேற் றவாஅது மேன்மேல் வரும்." என்ற பொய்யாமொழிப் புலவர் உபதேசம் இங்கு சிறந்த பிரமாணம்.

25. விஷய சுகங்கள் சாசுவதமாகா. அவைகளாலடையும் சுகம் சமுத்ர கடலில் தோன்றிய அலைகளுக் கொப்பாகும்.

"அவாவென்ப வெல்லா உயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து."

என்று மிகவும் பொருள் பதிந்த வாக்கியங்களுமுள.

26. ஆகவே, இவையனைத்தும் கவனித்து நாம் மேற்கூறியவாறு சதாகாலமும் நல்வழியிலேயே மனத்தைப் பழக்கி வருவோமேயானால், தியானகாலத்தில் மனது விஷயங்களை நாடிச் செல்லாது. யோகிக்கும்போது, வைராக்கியம் (ஆசையின்மை) மனதை வசப்படுத்துவதற்குச் சிறந்த சாதனமாகும். இதற்கு முழு விபரங்களும் "பபகுருசரணசந்திக" என்ற நூலிற் கூறப்பட்டிருப்பதால், அதை ஒவ்வொருவரும் பார்க்கவேண்டியது அவசியமாகும். சாஸ்திரங்களைப் படிப்பதால் மட்டும் பிரயோஜனமில்லை. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது." கற்றபடி நடந்து அனுபவத்திற் கொண்டு வரவேண்டும். என்றால், ஒவ்வொரு விஷயத

தையும் ஸ்வானுபவத்திற் கண்டறிய முயலவேண்டும். அவ்விதம் செய்தாற்றான் பலனுண்டு. அனுபவத்திற் கொண்டுவர எத்தனியாத யாதாமொருவன், நூல்களை வாசிப்பதாலும், பிறருக்குக் கூறுவதாலும் மாத்திரம், தான் உத்தேசித்தபடி பலனையடைவது இயலாத காரியம். அப்படித் தன் வெளிவேஷத்தால் மட்டும் பலனை யடைவதாகக் கருதியும், பிறரை மயக்கியும் காலங்கடத்தி வரும் நூல்வழி யில்லா சுயநலன் எத்தகையனென்றால்;

ஓதி யுணர்ந்தும் பிறற்குறைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையாரில்"

என்றபடி பரிதாபத்திற் கிடமாவன். ஆதலால், நாம் யாவரும் கூடியவரையில் உண்மையாகவே நடக்கமுயலக்கடவோம்.

27. மேற்கூறியவாறு அனுஷ்டிப்பதற்கு வேண்டிய மனவலிமை, ஆசையின்மை, சாதுசேவை, ஜீவகாருண்யம், ஈசுவரபக்தி ஆகிய இவைகளைக் கடவுள் நமக்கு அருள் செய்வாராக!

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியுளம் நாடு."

ஓம் தத் ஸத்.

கிருஷ்ணஸாமி, *

---

*ஸ்ரீமான் வி. ஜீனராஜதாஸர் அவர்கள் 1917-ம்ஸு ஜூலைமீ அடையார் புல்லட்டினில் இங்கிலீஷ்பாஷையில் வெளிவந்த வியாஸத்தின் மொழிபெயர்ப்பு.

பிள்ளையார் சுழி.

பிள்ளையார் சுழியென வழங்கும் ஓங்காரத்தினம்சமாய உ-கார மௌனாக்ஷர விளக்கம்.

ஓமெனும் பிரம்ம காரணத்தினின்றே பிரதி பலித்தன காரிய ஐமுகஞ் சிவனுமாம். இதற்கு மேற்கொள்,

திருமந்திரம்.

"ஓங்காரத் துள்ளே யுதித்த வைம்பூதங்க
ளோங்காரத் துள்ளே யுதித்த சராசர
மோங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன
வோங்காரஞ் சிவபர சிவரூபமே." எனவருவதோடு,

பகவற்கீதையும்.

"ஓமென்கின்ற தனியெழுத்து முரைத்தற்கரிய தற்பரமுந்
தாமங் கமழுந் தார் மார்பா சத்தென்கின்ற தனிப்பதமு
மாமென்கின்ற விவைமூன்று மறிவின்பெயர் மற்றிவற்றாலே
யாமுன்புணரு மறைமறையோர் யாகந்தோன்றிற் றெனவறி
எனவருவதாலும், [வாய்."

மகாவாக்கியமும்,

"உலகமுதற் பொருளை யும்பர்க்குணர்வரி தாம்பொருளை
யோதிய வேதாகாமத்தி னுட்பொருளைப்
பலகலையின் பொருண் முடிவின் முடிவான பொருளைப்
பற்றறப்பற்றிய பெரியோர் பரவிய வான்பொருளை."
எனற்கத்தாட்சியாய்,

மண்ணிற் பிறந்த உயிர்க்கெல்லாந் தானாகு
விண்ணகமே யாகுஞ் சிவம்." எனஞானமூதாட்டி
குறளும், அதன்றியுஞ் "சத்தம்பிறந்திடத்தே சகலகலையும்

பிறக்கு'' மென ஆன்றோருங் கூறியுள்ளார். அன்றியும் 'ஓ'மெனும் பிரணவாக்ஷரம் நோக்குதற்கும் கேட்பதற்கும் ஒரே அக்ஷரமாகத் தோன்றினும் அ-உ-ம் எனும் மூன்றெழுத்துக்களும் அடங்கியிருக்கின்றன. ஆனதுபற்றியன்றோ

'ஞானமணிமாலை' நூலாசிரியரும்

"ஆவென் றதின்பொருளை யார்க்கும் நவிலாதே
ஊவதனுக்கப் பாலென்றோதி விடு'' என்றும்
"அரியபெரும் பொருளையாற் கறியவாம் புவியிற்
பெரியோரறிவ ரெனப்பேசி விடு.'' என்றும்,
"கோன்கண்ட ஞானக் குருவருள் பொருளை
நான்கண்டே னென்று நவிலாதே—ஏனென்றால்
வெங்கலத்தி னோசை வெகுவாய் முழங்கும் பசும்
பொன்கலத்தி னோசைப் பொருள்.

எனக்கூறியிருத்தலானும்

அவ்வகார உகாரங்களையே சித்துநூல் வல்லுநரும் "எட்டிரண்டென்றும்" "பிந்து நாதமென்றும்'' "சிவம் சத்தியென்றும்'' அகார உகாரமென்றும் கூறுகின்றனர், அதற்கிணங்க, திருமூலஞான மந்திரத்திலும்.

"எட்டு மிரண்டு மிறைவனு மென்பர்
எட்டு மிரண்டையு மெண்ணிலோ மென்பர்
எட்டும் பதியினை யேகினுற் பசுவில்
எட்டு மிரண்டையு மெண்ணியர் பத்தரே.''

எனத் திருவாய் மலர்ந்தருளியதானுங்காண்க. அனுபவத்திலும் இப்பிரபஞ்சததில் உயிர்ப்பிறப்பாம் நம்மானவஜாதியின் குழவி ஜனித்தவுடன் இயற்கையாயுச்சரிக்குஞ் சப்தம் அ-உ-உங்-எனபவைகளேயாம். பாலர்கள் பசியினாலமுஞ் சபதமும் உங்கா உங்கா வெனுமொங்கார சப்தமேயாம். அதோடு பஞ்சபூதங்களும் இயற்கையாலோ, செயற்கையாலோ ஒன்றோடொன்று தாக்குறும்போதெழுஞ் சப்

தமும் சர்வவுயிர்களின் சப்தமுமுற்று நோக்கிற் சர்வமும் மோங்காரத்திருந்தே ஜனித்ததென ஸ்பஷ்டமாகும். ஆகவே அ-உ-வெனு மக்ஷரமோங்கார அம்சமே யெனவிளங்கும். ஆனதாலன்றோ

திருமந்திரமும்

"ஆமேசிவங்க ளகார வுகாரங்க
ளாமேபரங் களறியா விடமென்ப
வாமே திருக்கூத் தடங்கிய சிற்பர
மாமே சிவகதி யானந்த மாமே." எனவருவன

வற்றாலும் முன்னுணர்க. முன்னுணர்வோடு இதுகாருங்கூறி போயதில் அ-உ வெனு மக்ஷரமோங்காரத தமசமேயெனப் பெற்றாம். பெறவே, இஃதன்றி வடமொழி வல்லுநரும் இருக்காதி மறை உபநிடதார்த்தங்களும் மற்றெந்நூலையு மெழுதத் துவக்குங்கால் காரணமான ஓமெனும் பிரணவ பீஜமுன் வரைந்து ஏனைய காரிய விடயம் பின் வரைவது பண்டு தொட்டிதுகாறும் வழக்கம். அதைப் போன்றே தென்மொழி விற்பனரும் பண்டுதொட்டு எச்சாஸ்திர மெழுதத் துவக்கினும் ஓங்காரத்தினம்சமாய உகாரமெனு மௌனா க்ஷரத்தை முன்னெழுதி மற்ற விடயம் பின்னெழுதும் வழக் கமாயிற்று. ஆகையினாலன்றோ

"ஓமெனு மக்ஷரமே யதற்கேயோ

ரூமை யெழுத்தென்றோர் பேருமுண்டா" மென் றனர் கொங்கணவரும். அந்நீண்ட வழக்கத்திருந்தே அவ் வுகார வக்ஷரத்துக்கு ஊமையெழுத்தென ஓர் நாமம் வந்து ள்ளது. அந்த நாமஞ் சப்தமின்மையால் வந்ததோ வெனின் அஃதின்று. அவ்வுகாரம் அக்ஷரத் தொடர் பினின்றால் சப் தம பெறும். தொடர் பின்றித்தனியாய் ஒப்பற்றுமுதலில் நின்று விளங்குவதால் நாற்பூதத்துக்கும் முடிவாம். ஆகாய அம்சமாய ஓங்காரத்தின் திரிபான அவ்-உ காரமௌனாக்ஷ ரம் ஆகாயத்தின் தன்மையையும் அவ்வாகாய வடிவானுபூதி

யுற்ற கற்றறிந்தடங்கிய வாலறிஞராம் மௌனிகளின்றன்மையையும் பெற்றிருக்கின்றது. ஆனதாலன்றோ அவ்வாகாய குணத்தைப்பற்றி ஞானமூதாட்டியும்,

"நிலமைந்து நீர் நான்கு நீடங்கி மூன்று

உலவை இரண்டொன்று விண்." என அருளியும் மௌனியின் குணத்தைப்பற்றி "மோனகமென்பது ஞான வரம்பு" எனவும் திருவாய் மலர்ந்தனள். அதற்கொக்கத்

தாயுமான சுவாமியும்,

"கண்டன வெலா மௌன வுரு வெளியதாகவுங் கருதி யஞ்சலி செய்குவாய" எனவும், பேரனந்தம் பேசி மறையனந்தஞ் சொலும் பெரிய மௌனத்தின் வைப்பென்றும்,

"மூலன் மரபில் வரும் மௌன குருவே" எனக்கூறிய வற்றாலுங்காண்க.

தேவி காலோத்திரமும்

"வானம்போல வடிவிலதா யெங்கும்
ஆனதாகத் தியானம் பண்ணுதவன்
கானந்தனிலுண்டெனக் கட்டுப்பட்
டீனமான பிறப்பிறப்யெய்துமே." எனவருதலும்,

அவ்உகாரம மௌனாக்ஷரமெனக் கூறற்கிடந்தது. அம் மௌனாக்ஷரமே சர்வ சாஸ்திரங்களின் முன்னிலையினுங் குறிக்கப்பட்டுள்ளது. ஏன் அம்மௌனாக்ஷரத்தை முன் வைக்கப்பட்டுள்ளனவென வினவில், ஜகஞ் ஜீவபரங் கற்றனை யெனத் தனைத்தான் கண்ட மகான்களும் அம்மௌனாக்ஷரத்தை முன் வைத்து தொன்று தொட்டும் எழுதும் வழக்கமே போதிய சான்றும். இவ்வழக்கம் யாது காரணம் பற்றி அம்மௌனாக்ஷரத்தை ஆன்றோரும் முன்வைத்தெழுதினர்? ஆராயுமிடத்து சர்வபோதங்களையும் சாஸ்திரங்களையும் போதிக்கும் கருவியாய் கல்வியை உலகிற்றந்தருளிய மகான்களின் கருத்து நன்கு விளங்கற்பாலதாம். அஃதென்

னெனின், வேதவேதாந்தத்தின் கருத்துக் கொத்திருக்கின்றது. அஃது வருமாறு, வேதமானது உலகில் ஜீவேசுவரரூபமாய்ப் பேதப்பட்டிருந்ததை ஒழிக்குமாறு கன்மஞ் செய்யென்று தூண்டிய வேதமே, மறுத்து சர்வமுஞ் சிவமயம் எனப்பக்திசெயக்கூறி அவ்வவசரமும் கழன்றபின் ஜீவனே சிவனென்றும் சிவமே ஜீவனென்றும் அத்வைதத்தை நிரூபித்தது. அதுபோற உலகிற் கலவியைத் தந்தருளிய காத்தர்களின் கருத்து வேதத்தைவிட விசேடித்திருக்கின்றது. என்னெனின், கல்வியைக் கற்குமுறையே கற்று சர்வசாஸ்திர நுட்பமோர்ந்த பின்பும் மௌனமுற்றலே தகுதியெனக்காட்டற்கு அறிகுறியாக அம்மௌனாக்ஷரத்தை முன்வைத்தமைத்துள்ளார். ஆனதுபற்றியன்றோ, அதிவீரராமபாண்டியனும்,

"அறிவோர்க்கழகுகற்றுணர்ந்தடங்கல்" எனக்கூறுகின்றனர். ஆனதாற் கற்றபின்பும் மௌனமுற்றலே தகும் நிலையென்றுவற்புத்ததற்கன்றோ,

"மௌனே கலஹோ நாஸ்தி" என வாக்கியமும் பிறந்துள்ளது. இதுகாறும் மேற்கூறிப் போந்த நியாயங்களாலும் மௌனமே முடிபு நிலையெனப் பெறும். ஆனதுபற்றியன்றோ மௌனாக்ஷரத்தை முன்வைத்தெழுதிய மகானகனின் ஆழ்ந்த கருத்து நன்கு விளங்கின்றது. இக்கருத்தை நோக்கியன்றோ- தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்." யெனநிரூபித்தனர்.

இதுகாறுந்தக்க நியாயங்களால் விளக்கக் காட்டிய அம்மௌனாக்ஷரமே உலகிற் பிள்ளையார் சுழியென்ற ஓர் குறு நாமம் பெற்றுள்ளது. அப்பிள்ளையார் சுழியென்ற வாக்கியத்தை வினாவிடையாகப் பார்க்குங்கால், அஃது ஒருவாறு பொருத்தமுள்ளது. என்னெனின் பிள்ளையாரெனும் வினாவிற்கு சுழியெனும் விடைபிறக்கின்றது. பிறந்த அச்சுழி

யை நோக்குங்கால் சுழிக்கும் ரூபமுள்ள ஓங்காரத்தினம் சத்தையே தெற்றென உணர்த்துகின்றது. உணர்த்தியும் அதுவுமன்று சைவாபிமானிகள் கூறும் ஆனையின் ஸ்ரூபமுள்ள ஓர் தெய்வத்தியானத்தை நினைப்புறுத்து மோர் இடுகுறி அக்ஷரமெனின் அஃது உண்மையிற் பொருந்தாது' ஏனெனின், விநாயக உற்பத்தி கூறும் ஸ்காந்தமும் ஒருபோது ஈசனும் ஈசவரியும் வனத்திடை சென்று ஆங்குள்ள ஓர் மண்டபச் சுவற்றினில் ஈசனீசுவரி நோக்கினின்று ஓங்காரஸ்ரூபமாய் காரணத்திற் காரிய ஆனைமுக விநாயகர் உற்பத்தியெனக்கூறி அக்காலத்திலேயே தந்தையின் வரப்பிரசாதத்தால் தன்னையாரும் முதற்கடவுளாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வரம்பெற்றாரெனக் கூறுகின்றனது. அன்றிருந்து முதலிற் தன்னை ஸ்மரிக்காமல் எவரேனும் எவ்வேலை துவக்கினும் அதை விக்கின மியற்றுந் தொழிலார் விக்கினேசுவரக்கடவுளெனத் தொழிற் பெயர் பெற்றனர். மற்றுங் காரணங்கள் பல விரித்துரைக்கப்படுகின்றன. அஃதின்றி சுருக்கி கருத்தை ஆராயுமிடத்து, காரண ஓங்காரஸ்ரூபத்தினின்றே காரிய விநாயகவுருவ வணக்கமுமுற்பத்தியானதென வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதன்றோ? விளங்கினும் ஓங்கார ஸ்வரூபமே காரண மென்றோராது காரிய ஆனைமுக விநாயகரைத் தெய்வமெனக் கொண்டு வழக்கத்து வந்ததுபோல் ஓங்கார அம்சமாய உகார மௌனாக்ஷர மென்றெண்ணாது ஆனைமுகத் தெய்வத்தை நினைப்புறுத்தவந்த பிள்ளையார் சுழியென மயங்குகின்றனர் இப்படி மயங்கலாமலன்றோ!

"பொருளல்லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானா மாணாப் பிறப்பு." என்று பொய்யாமொழியும் புகன்றனர். புகன்றதாற் காரிய விநாயகவுருத் தெய்வவணக்கஞ் செயற் பாலதன்றோ வெனின வணங்குதல் அறிவுடையோற் கழகன்றனவே மயன நிரூபித்ததற் கன்றோ

"எப்பொருளெத் தன்மைத்தாயினு மப்பொருளப்படி காண்பதறி"வேனாது "அப்பொருள் மெய்ப்பொருள் காண்

பதறிவு" எனத் தேவர்குறளும் துணிந்துரைக்கின்றது அதல்லாமலும், பிரபுலிங்கலீலையும்

"புறம்பு காண் குவன் புல்லிய னீசனை
அறிந்த ஞானி யகமுறக் காண்பனல்
எறும்பி காண்குறிலின் கரும்பே கொளுஞ்
செறிந்தவாடிலைத்தின்பன வெம்பவே." யெனக்

கூறுகின்றது. ஆகையாலதற்கிணங்க உடன்படினுந் தெய்வவணக்கமின்றோ வெனின் அஃதின்றென்பதன்று "மும்முறையுந் தெய்வவணக்க முண்டென," ஞான வாசிட்டங் கூறுகின்றது.

"அகமகமென் றனைத்துயிரி னிடமிருந் தனவரத முரைப்பதாகி
நிகளொளியாயான்மதத்துவமான சொரூபத்தைநினைத்தல்செய்யாந்
திகழிதய குகையுறையுந் தேவதையை விட்டயலே தெய்வந்தேடன்
மிகவரியகவுத்துவத்தையெறிந்துசிறுமணிதேடும்வேட்கைபோலாம்

அன்றியுஞ் சூதசங்கிதையும்

"தன்னுளே தன்னைப் பூசியாதய லோர் தாபரம்பூசிக்குந் தன்மை
முன்னுளங் கையிற் பாயசமெறிந்து மூழங்கையை நக்குவதொக்கு
பின்னமிலாதாய்ப் பஞ்சபூதத்துட் பிறப்பதாம் பிரமானுபவமே [ம்
மன்னியதீரன் சோகத்தை யெய்தான் மணிவிளக்கசையுமோ மதிப்
என்பதாலும், [பாய்

"உருவமெலா முற்றுணரி லோயா வெளியாம்
அருவாம் வெளியி லழிந்தி—திரிபின்றி
ஆயுங்காற் சங்கற்ப மின்றியிலை யதனை
ஆயுங்காற் மெய்யுணர்வேயாய்."
"மெய்யுணர்வை யுற்றுணரில் மேல்கீழொப் பின்றியே
ஐயந்திரி பின்றகன் றொளிரும்—பையப்
பழகப்பழகப் பறக்குந் துயர்கள்
பழயப் பற்றோடு பணிந்து."

யெனசுவானு பூதிமான்கள் திருவாய் மலர்ந்தருளியதாலும் தெய்வ வணக்கத்தின் முடியு நிலையிதாமென வாலறிஞரின் கருத்து விளங்கிற்று. ஆயினும இதைப்பற்றி விரிக்கிற் பெருகுமென நிருத்தி மேற்கூறிய மௌனாக்ஷரமும் ஓங்கார அம்சமெனவும் அவ்வோங்காரம் ஆகாயவடிவ பிரமமே யெனக்காட்ட, "பிரணவாகாய சின்மய விமல சொரூபமே" எனக்காண்க, ஓம் தத் ஸத்.

வரகவி ந. பாக்ஷா ஸாஹிபு.

சிறுவர் பக்கம்

தேகமும் மனமும்.

(248-ம் பக்கத்தொடர்ச்சி)

அப்போது குரல் "இது வேண்டாம், வேண்டாம், வேண்டாம் மூன்று தரம் சொல்லுகிறேன்." என்றது.

தேஹத்திற்கு புத்திமயக்கமிருந்த படியாலும், வெறி தணியாதிருந்தபடியாலும், குழந்தை கெஞ்சிக் கொண்டதாவது குரலின் வார்த்தையாவது கவனிக்கத் தக்கதென்று அதற்குத் தோன்றவில்லை. அது குழந்தையைக் கழுத்தைப்பிடித்து"தொலை"என்று ஓரே தள்ளாய்த் தள்ளிற்று. குழந்தை "கட கட" வென்று உருண்டு வெகுதூரஞ்சென்று ஒரு பெருங்கல்லில் தன் தலையை மோதிக்கொண்டு இரத்தப்பெருக்குடன் கிழித்த நார் போல் அசைவற்றுக் கிடந்தது.

தேஹம் அவ்விடம் விட்டகன்றதும், அந்தக்குழந்தையின் தாய், ஓடோடியும் வந்து குழந்தையை வாரியெடுத்துக்கொண்டு வீட்டிற்குள் வந்து, குழந்தையின் மார்பில் தன் காதை வைத்துப்பார்த்தது. மார்பு அடித்துக்கொள்ளவில்லை. குழந்தையின் ஆவி பறந்தோடிவிட்டது.

இதன் மத்தியில், தேஹம், அருகிலிருந்த காட்டிற்குச் சென்று மனம் போனபடியெல்லாம் திரிந்து சலித்துக் கடைசியாய் ஒரு மரத்தடியில் இளைப்பாற உட்கார்ந்தது. அப்போது காலடி சப்தம் கேட்டது தெரிந்து, யாரென்று பார்க்கையில், வேறொருமனிதன் தான் கொன்ற மானொன்றைத் தன் தலைமேல் சுமந்துகொண்டுவருவதைக் கண்ணுற்றது.

அப்பொழுது அருகிற்கிடந்த ஒரு கல், தனது கண்ணுக்குப் புலப்படவே தேஹம் அதை யெடுத்துக்கொண்டு அந்த மனிதனைக் கொல்ல நினைத்து மரத்தின் மறைவில் ஒதுங்கி நின்றது.

அப்போது குரல் "வேண்டாம்" என்றது.

தேஹம் குரலின் வார்த்தையைச் சற்றும் கவனிக்க வில்லைபுதிய. மனிதன் தன்னருகே வரவும் தேஹம் அவன் பின் சென்று தன் கையிலிருந்த கல்லை அவன் தலைமேல் தொப்பென்று போட்டது.

அந்த மனிதன் அக்ஷணமே குப்புரவிழுந்துவிட அவனது ஆவியும் பறந்தோடிவிட்டது. தேஹம் அம்மனிதனுடைய உடலைப்பிரட்டிப் பார்க்கையில் அந்தோ ! அது தேஹத்தின் தம்பியினுடலாயிருந்தது.

அப்போது குரல் "நான் கொல்லாதேயென்று சொன்னேனே" என்றது. "இது யாரிது, சும்மா சும்மா பேசுகிறது?" என்று தேஹம் சொல்லிக்கொண்டே பயந்து நடுநடுங்கி இருந்தவிடம் பெயராது நாற்புறமும் பார்த்துக் கொண்டிருக்கையில் குரல்,"என் பெயர் மனது. நான் உன்னுள்ளேயிருக்கிறேன். முதலில் பெருந்தீனி தின்னாதே யென்றேன். அப்புறம் குடியாதே யென்றேன். பின்பு குழந்தையை யடியாதே யென்றேன். கடைசியாய் உன் தம்பியைக் கொல்லாதே யென்றுஞ் சொன்னேன்" என்றது, தேஹம் இவ்வுரையைக் கவனியாததுபோல் நடித்து "பெண்டுகளும் பிள்ளைகளும் பட்டினி கிடந்தார்கள் என் தம்பி யென்று தெரிந்திருந்தால் நான் அவனைக்கொன்றிருப்பேனோ?" என்றது. "நீ வெறித்திருந்தாய். அதனால் உன் கண்கள் உன்னை யேமாற்றிவிட்டன. நீ குடியாதிருந்தால்—" என்று குரல் சொல்லிமுடிக்குமுன்,

தேஹம் "நான் காவலாவாய்ப்படுத்திருந்தது உனக்குத்தெரியாதோ?" என்றது மறுபடியும் குரல் "நீ பெருந்தீனிதின்றாய்" என்றது அப்போது தேஹம் சிள்ளென்று எரிந்து "பெண்டுபிள்ளைகள் பட்டினி கிடந்தனவென்று சொன்னதுகேட்கவில்லையே?"என்று சொல்லிவிட்டுச் சற்றுநிதானித்துப் பின் "நீ சொல்வதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும், நீ யார்? உனக்கு வேறு வேலையில்லையோ? நிமிஷத்து

க்கு நிமிஷம் தொட்டதெல்லாம் குற்றம் என்றும், நான் என்னசெய்தாலும் வேண்டாம் வேண்டாமென்றுஞ் சொல்லுவதற்கு உனக்குயார் அதிகாரம் கொடுத்தார்கள்? என் விஷயத்தில் நான் எனனிஷ்டம்போல் நடப்பேன்" என்று சொல்லிக்கொண்டே மானுடலைத் தலைமேல் வைத்துக்கொண்டு தன் வீடு சேர்ந்தது. மனது தன் நடவடிக்கைகளில் தலையிடுவது, தேஹத்திற்குச் சிறிதும் பொறுக்கவில்லை. ஆயினும், தன் குழந்தையின உயிரற்ற உடலைக்கண்டதும், தேஹத்தின் முகம்வாடி "ஐயோ என் புத்தி கெட்டுப்போயிறறே" என்று இரங்கியது.

தனது குடும்பத்தில் நேர்ந்த இரண்டு மரணங்களினுலுண்டான துக்கம் ஒருவாறு தணிந்து சக்தியும் சிறிது வந்தபின் தேஹம் முனபோல் வேட்டையாடவும், மீன் பிடிக்கவுஞ் சென்றது. கொழுத்த மிருகங்களும் மீன்வகைகளும் தேஹத்திற்கு ஏராளமாகக் கிடைததன. ஆகவே, பழையபடி அவைகளனைததையும் உடனே பக்ஷணம பண்ணவேண்டுமென்ற ஆவல தேஹத்திற்குண்டாயிற்று. ஆயினும் சூடுபட்ட பூனை நெருபபைக்கண்டு ஒதுங்குவதுபோல், தேஹம், மாமிசம் புசிப்பதை இச்சமயம வேண்டாமென்று நிறுததியது. பலே! "இதுதான் சரி" என்றது குரல் அப்போது தேஹம் ஆச்சரியபபட்டு! திடுக்கிட்டு "அடே இன்னும் இங்கேயே இருக்கிறுயா நீ?" என்றது.

குரல், அதற்கு மறுமொழியாய் "இன்று நீ செய்ததுதான் சரி. எனக்கு உயிரும் வந்தது. நானும் தேறினேன்', என்றது.

"பு! எலியோ, பூனையோ 'சர சர' என்றதாம் உனக்கு வேண்டி இன்று நான் மாம்ஸ பக்ஷணம் செய்யவில்லையென்று நினைக்கிறுயோ? எனக்கிஷ்டமிருந்தால் அத்தனையையும் ஒரே வாயாய்ப் போட்டுக் கொணடிருப்பேனே" என்றது.

வாதாடுவதற்கு இது சமயமல்லவென்றறிந்து குரல் சும்மா விருந்துவிட்டது. கொஞ்சம்காலமும் கழிந்தது. அப்போது பெருந்தீனி தின்னவும், குடிக்கவும், தன்னெதிரில் வருவோரையடிக்கவும், கண்டொன்று சொல்லவும், பிறர் சொத்தை யபகரிக்கவும், பிறரைக் கொல்லவும் தேஹத்திற்கு, அடிக்கடி ஆவலுண்டாயிருந்தது. ஆனால் அச்சமயங்களிலெல்லாம், குரல் சமயோசிதமாய்ப் பேசித் தேஹத்தைத் தடுத்து அதை முழுதுந்தன் வசமாக்கிக்கொண்டது. என்றாலும், தேஹத்திற்கும் குரலுக்கும் ஓரோர் சமயங்களில், பிரமாதமான கலகங்களும் உண்டாயின.

ஒருநாள் தேஹம் குரலை நோக்கி "பாபி, சண்டாளா; நீ இன்னும் தொலையவில்லையா; எத்தனை விஷயத்தில் உன் பேச்சைக் கேட்பது? இதுவரை கேட்டது போதாதா? நான் நல்ல பண்டம் தின்னப்படாது. தீத்தண்ணீர் குடிக்கப்படாது. என குடும்பத்தில் ஒருவரையும் கொல்லப்படாது, என் குழந்தையை அடிக்கப்படாது 'அல், அசல்' எவனாவது ஒரு புது சாமான் வைத்திருந்தால் அதைத்திருடப்படாது, என் தம்பியிடம் ஒரு பொய் சொல்லப்படாது. இதெல்லாம் சரிதான் "காதகன் போக்கன்" எவனாவது அகப்பட்டால் அவனைக் கொல்லப்படாதாம்! என்னைவிட்டுத் தொலை! இனிமேல் நான் என்னிஷ்டப்படித் தான் நடப்பேன்" என்றது அதற்கு "என் வார்த்தையைக் கேட்டு நடந்ததினால் உனக்கு இதுவரை என்ன கெடுதல் உண்டாயிற்று? சொல். பார்ப்போம். என் வார்த்தை கேட்டு நடந்தமேல் உனக்கு சுகமே ஆயிருக்கிறது" என்று குரல் பதிலுரைத்தது.

"உன் பேச்சைக் கேட்டதுமுதல் எனக்கு கெடுதலேயொழிய குணம் சிறிதுமில்லை. உன் போதனைப்படி நடந்தேனே யென்று வருத்தமே யொழிய சுகம் சிறிதுமில்லை. என்னிஷ்டப்படியே யிருந்தேனென்றால், பஞ்சபக்ஷ்ய பரமான்னங்களுடனும் உத்கிருஷ்டமான பான வகைகளுட

னும் உல்லாசமாய்க் காலம் கழித்து வந்திருப்பேன். போனது போகட்டும் உன்னைப் 'பைசல்' பண்ணிவிடுகிறேன். அப்புறம் வழக்கில்லை'' யென்று தேஹம் பதிலுரைத்தது.

தேஹத்திற்கு ஒரு சங்கதி நன்றாக ஞாபகமிருந்தது. தான் தீர்த்தண்ணீர் குடித்திருக்கும் சமயங்களில் குரலின் 'கொட்டம்' அடங்கியிருப்பது அதற்குத் தெரிந்திருந்தது. ஆதலால் தீர்த்தண்ணீர் 'மொடமொட' வென்று குடித்துவிட்டால் குரல் மாண்டேபோகுமென்று நினைத்து சலிக்கு மட்டும் குடித்தது. ஆயினும் போதை தெளிந்த க்ஷணமே குரலும் தன் 'சேஷ்டை'யை ஆரம்பிப்பது கண்டு என்ன செய்தால் இதன் தண்டாவைத் தீர்த்தொழிக்கலாம் என்று காடுமேடெல்லாம் திரிந்தது.

குரல் சும்மாவிருக்கப்படாதா? ''என்னைக் கொல்ல உன்னாலு மாகாது உனனப்பனாலு மாகாது'' என்றது. ''ஓஹோ இன்றைக்கில்லாவிட்டால், வேறொருநாள் உன் கொட்டத்தை யடக்கத்தக்க ஒன்று எனக்குக் கண்டிப்பாய்க் கிடைக்கும். ஜாஸ்தியாய் துள்ளவேண்டாம்'' என்றது தேஹம்.

''என்னைக்கொல்ல உன்னாலு மாகாது. உன் பாட்டனாலு மாகாது. என்னைக் கொல்லுமுன் நீயே மாண்டுபோவாய்'' என்று குரல் பதிலுரைத்தது. இது வாஸ்தவமென்பது தேஹத்திற்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. இவ்வாறாக மனம் தேஹத்தை ஜயித்து அதன்மேல் தன்னதிகாரத்தைப் பலவிதமுஞ் செலுத்திவந்தது. தேஹமும் மனதின் ஆக்ஞைகளைச் 'சிரஸா' வஹித்து நடந்து வந்ததினால் அதன் காலமும் சுகமே கழிந்துவந்தது. இப்படி வெகு காலஞ்சென்றபின் மனம் தேஹத்தின் மேல் ஸர்வாதிகாரமுமடைய, தேஹம் தன்ஸ்வாதந்திரிய முழுதுமிழந்து மனது இட்டதே சட்டமென்று நடந்துவந்தது.

தேஹம் சிற்சில சமயங்களில் நல்ல ருசியான பண்டங்களைக் கண்ட சமயங்களில் நான் இதைத் தின்னலாமா

என்று கேட்கும். மனம் வேண்டாம் பட்டினி கிட என்னும். தேஹம் *'தேமேனு' பட்டினி கிடக்கும். "நல்ல திராக்ஷ ரஸம் புதிது வந்திருக்கிறதாம் குடித்தாலென்ன" என்னும் தேஹம். "வேண்டாம். அப்படி யென்ன தாஹம்? அதைக்குடியாவிட்டால் உன்னுயிர் போய்விடுமோ?" என்னும் மனம். தேஹமும் தாஹத்தினால் துடிக்கும். வேறு சமயங்களில் தேஹத்திற்கு எக்காரணத்திலாவது உத்ஸாஹம் உண்டாய்விட்டால அப்போது பாடவும் ஆடவும் எத்தனிக்கும் "வேண்டாம் இப்போது கடவுளைத தியானி" என்னும் மனம். தேஹம 'கைகூப்பிக் கண்மூடி'க்கடவுளைத் தியானிக்கும்—ஐயோ என் கதி இப்படி ஆயிற்றே! என்று வருநதியிருக்கலாம்—மனைவி மக்களுடன வசிப்போம் என்று தேஹம் நினைததால் 'தனிததிரு' எனனும் மனம். தேஹமுந தனித்திருககும். இவ்வாறாக தேகத்தின் அந்திய காலஸ்திதி அதன பூர்வஸ்திதியை வெகுவாய் ஒத்திருநதது. இது தெரிந்தவுடன் தேஹம் மறுபடியும் கலாட்டா' செய்ய ஆரமபிததது. அது சொன்னதாவது "மனமே நீ பெரிய ஸ்வாமியென்பது இப்போதுதான தெரியவந்தது என்னைப் பழையகுருடி கதவைததிறடி என்று செய்துவிட்டாயே! எதைததொட்டாலும வேண்டாம் வேண்டாமென்று, சொன்னதையே சொல்லிக்கொண்டு, என்னை என்னஸ்திதிக்குக் கொண்டுவந்துவிட்டாய்! நான் உன் வார்த்தையைக் கேட்டு நடப்பதற்கு முன் வெகுவாய்க் கஷ்டப்பட்டேன். உன் வார்த்தையைக்கேட்டு அதனபடி நடக்க ஆரம்பித்த பின என கஷ்டங்கள் பதின் மடங்காக அதிகரித்துவிட்டன. அக்காலத்தில் இரவோ பகலோ என்னிஷ்டப்படி சுகிததுவந்தேன். இப்போது சுகமென பது கனவிலுமில்லை. என தோலெல்லாம் சுருங்கிவிட்டது. உடம்பில் இரததம சிறிதுமில்லை. பொழுது விடிந்து பொழுது போகும்வரை கர் கா என்று இருமுப்பதும

* தேமேனு என்பது "தெய்வமேயென்று" என்பதன் மரு

கொள்ளுக் கொள்ளு என்று இருமுவதும், முணுமுணு வென்று ஜபம் செய்வதையுந்தான் கண்டேன். தந்தையா, தாயா, பெண்டா, பிள்ளையா, உற்றாரா, உறவினரா ஒருவரும் கிடையாது. உன் ஸஹவாஸம் உன் ஸ்வரூபம் இன்றுதான் தெரிந்தது இங்குவிட்டு நட. நீ இருந்த இடத்திற்கு வேறு ஆள் வைத்துக்கொள்ளுகிறேன்'' என்றது.

பின்னர் எங்கு மனம் வாதாடி வழக்குரைக்குமோ வென்று தேஹம், தன்னிருகைகளாலும் தன்னிருகாதுகளையும் இருகப் பொத்திக்கொண்டு தான் முன்னாளில் தன்னிச்சையாய் உண்டு குடித்து உல்லாசமாய்த் திரிந்து அனுபவித்த சுகங்களை யெல்லாம் ஒன்றொன்றாய்ச் சிந்தித்து அப்போது அந்த சுகங்களைத் திரும்பவும் அனுபவிக்கவேண்டுமென்ற ஆவல் தேஹத்திற்கு உடனே உண்டாயிற்று. தேஹம் யதாப்பிரகாரம் பெருந்தீனி தின்னவும், குடிக்கவும், மற்றபடி அழகலாதன செய்யவும் பிரவர்த்தித்துவிட்டது. மனத்திற்கு இவ்வித நடத்தைகள் சிறிதும் சம்மதமில்லை ஆனால் பாபம் என்ன செய்யும்? சிறிதும் சக்தியற்றதாய் 'பேந்தப்பேந்த' விழித்துக்கொண்டு நின்றது.

கொஞ்ச நாளைக்கெல்லாம் தேஹம் தனது பால்ய விளையாட்டுகளில் ருசியில்லை யென்று கண்டு, சலிப்புடனும் துக்கத்துடனும் இன்னது செய்வதென்று தெரியாமலும் கட்டைபோல் கிடக்கையில், மறுபடியும் குரல் பேசவாரம்பித்தது.

“எனக்குச் சங்கடமாகத்தானிருக்கிறது” என்றது.

“உனக்கென்ன கேடு! யார் பேச்சு நிஜம், யார் பேச்சு பொய்? என்னிஷ்டபடி பேனால் உனக்குக்கஷ்டம், உன்னிஷ்டபடி நடந்தால் எனக்கு நரகப்பிராப்தியாகிறது. ஆதலால் என்னவானாலும் சரி, இனி உன் வார்த்தையை நான் கேட்பதேயில்லை உன்னைத் திருப்தி பண்ணுவதினால் பயனொன்றுமில்லை'' என்றது தேஹம்.

குரல் சும்மா விராமல் மறுபடியும் "சற்று கேள். நீ கஷ்டப்படுகையில் எனக்கு என்ன சுகமுண்டு? பெரியதனம் வேண்டுமென்று நாம் ஒருவரோடொருவர் முரண்டிக் கொண்டதனலல்லவோ இவ்வளவு அனர்த்தமும் விளைந்தது! இனிமேல் அந்தச்சண்டை வேண்டாம் ஒருவனுடைய லாப நஷ்டம் மற்றவனுக்கு முண்டென்று அறிந்து உடன் பிறந்தாரைப்போல் கூடிவாழ்ந்தால் நம்மிருவருக்கும் உண்டாகக்கூடிய சுகத்திற்கும் அளவேயிராது. நாமிருவரும் கூடிவாழ்ந்தே தீரவேண்டு மென்பது தெய்வ சங்கற்பம். நம்மிருவரது சேர்க்கையினால் மனிதன் என்னும் ஒரு அற்புதமான ஜீவனும் உண்டாகும்" என்றது.

உடனே தேஹம் "இதற்கு நான் சம்மதிக்கிறேன், என் மட்டில் என் கடமைகளை நான் ஸத்தியமாய்க் குறைவற நடத்திவருவேன்" என்றது.

மனமும் "சரி பார்ப்போம்." என்று பதிலுரைத்தது. இந்த ஒப்பந்தப்படி தேஹமும் மனமும் வெகு நாள் ஒத்துவாழ்ந்து வந்தன. தேஹமோ மனமோ ஒன்று மற்றொன்றின் சுகதுக்கங்களைக் கவனித்து வர மனதார ஒன்றினால் மற்றொன்றிற்குத்தீங்கு நிகழாமல் வெகு நாள் சென்றது.

மனது முன்பு சொல்லியிருந்தபடியே தேஹமும் மனமும் கூடி வாழ்ந்து வந்ததினால் மனிதன் என்னும் அற்புதமான ஒரு ஜீவனும் ஜனித்தது. இதைக்கண்டவுடன் தேஹத்திற்கும் மனத்திற்கும் உண்டான சந்தோஷத்திற்கும் அளவு இல்லவே இல்லை.

அப்போது மனம் தேகத்தைப் பார்த்து இனி உன்னை நான் தேஹம் என்று கூப்பிடுகிறதில்லை. நீ என்னுடலிற் பாதி என்றது.

தேஹம் இனி நான் உன்னை சின்னஞ்சிறு குரலென்று கூப்பிடுவதில்லை. நீயே என் ஆத்மா என்றது.

எஸ். ஆர். அனந்தநாராயணையர்

படங்களுடன் கூடிய கதைகள்.

சுகிர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை	0—2—0
சிவாஜிமஹாராஜ் } ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன் — } ஐயர் பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை — மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள் — அன்னிபெஸன்டம்மை சரித்திரம்
ஹிந்து என்பவன் எவன் — ஷை செய்யுள்
காயத்திரி — எண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம் — திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
லோககுருவாகிய பரமன் வருவானேன்

ஒவ்வொன்றும் இரண்டணா

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
நியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்வைதப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம். — சர்மார்க்கதீபம்

ஒவ்வொன்றும் மூன்றணா

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது
(2) ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்கள்.—ஆத்மதர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள்.

தியானக்கிரம விஷயம்	0—4—0
ஹிந்து மததூஷணையின் பரிகாரம்	0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம்	0—6—0
பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் ஷை	
கல்விகற்பித்தல்—ஈசுவர கைங்கரியம்	0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை	0—8—0
பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன்யாது	0—9—0
எனது பிரதிஜ்ஞை—வி. ஜினராஜதாஸர்	0—12—0
யோக உபந்யாஸங்கள்—அன்னிபெஸண்டு	0—12—0

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

எல்லாம் வல்ல ஈசன்.

சீக்கிரம் வெளிவரும்! கே. எஸ். ராமசந்திரய்யர்

அதைபற்றி கனம் ஹைகோர்ட் ஜட்ஜி திவான் பகதூர் டி. சதாசிவ அய்யர் அவர்களது அபிப்ராயத்தையும் ரிடையர்டு 'அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ஆவ் ஸ்கூல்ஸ்' ஆகிய ஸ்ரீ ஸி. என் சுப்பிரமணிய அய்யர் அவர்களது அபிப்ராயத்தையும் இதனடியில வெளியிடுகிறோம்

'Maryalaya' Royapettah, Madras,

Dear Sir, & Brother,

Having read your booklet entitled "எல்லாம் வல்ல ஈசன்" I have great pleasure in stating that it contains unsectarian religious and moral instruction and it appears to me that it may be used for giving such instruction for boys and girls studying in primary schools with great benefit to them.

Yours fraternally,

T. SADASIVA AYYAR,

(High Court Judge, Madras.)

The brochure by Mr. K. S. Ramachandra Ayyar, Retired Tahsildar, Alangudi, treats, as the name denotes of "The Almighty power of God." The work, though intended for Primary Schools and their teachers, may with advantage, be read and digested by the students of secondary schools and colleges, as it throws light, in a condensed form, on a subject of which they have no clear idea. The author has done well in adopting the form of a dialogue which is sure to serve his purpose well. The principal points treated of are (i) Qualities distinguishing man from beast (ii) Immanence of God and His Almighty power (iii) man's journey in the three worlds with their distinguishing features and (iv) meaning of "death" The subjects though difficult are well handled by the free use of stories and facts familiar to boys in illustration of the statements made. This will greatly facilitate the understanding of the subjects. His treatment of "Immanence of God" and "man living in three different worlds" by means of familiar stories and objects is splendid and lucid.

C. N. SUBRAMANIA AYYAR B. A.,

(Retired Assistant Inspector of Schools.)

Adyar, Madras